புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2055 • செப்டம்பர் 05, 2024 • புரட்சி 24 • முழக்கம் 34 • விலை ரூ.3.00

## ஆதிதிராவிடர் நல ஆணையத்திடம் நேரில் வழங்கப்பட்டது!

# தமிழ்நாட்டுக் கிராமங்களில் நிலவும் தீண்டாமைகள் பட்டியல் தயாரித்தது கழகம்

*சேலத்தில் 2023, ஏப்ரல் 29,30 ஆகிய தேதிகளில் நடைபெற்ற “இது தமிழ்நாடு! இளம் தலைமுறையின் எச்சரிக்கை மாநாட்டில், வைக்கம் நூற்றாண்டை முன்னிட்டு ஜாதி - தீண்டாமை எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*முதல்கட்டமாகத் தேநீர்க் கடைகளில் நிலவும் இரட்டைக்குவளை முறை, வைக்கத்தைப் போலவே தாழ்த்தப்பட்ட மக்கள் பொது வீதிகளில் நடமாடும் உரிமைகளைத் தடுத்தல், கோயில் நுழைவு அனுமதி மறுப்பு என்று ஜாதி தீண்டாமைகள் நிகழும் கிராமங்களைக் கண்டறிந்து, அதன் பட்டியலைக் கழகத் தலைமைக்குச் செயல்வீரர்கள் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது.*

*அதன் அடிப்படையில் திண்டுக்கல், கோவை, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, திருப்பூர், ஈரோடு தெற்கு, ஈரோடு வடக்கு உள்ளிட்ட மாவட்டங்களில் ஜாதித் தீண்டாமைக் கணக்கெடுப்புப் பணிகளைக் கழகச் செயல்வீரர்கள் மேற்கொண்டனர்.*

*கணக்கெடுப்புப் பணிகளுக்கு என்று பிரத்யேகமாக படிவங்களைத் தயாரித்து களத்தில் இறங்கினர் கழகச் செயல்வீரர்கள். தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு மேலாகக் கிராமம், கிராமமாகச் சென்றும், பல்வேறு ஊர்களில் தங்கியும் இந்தக் கணக்கெடுப்புப் பணிகளை மேற்கொண்டனர். தமிழ்நாட்டில் தீண்டாமைக் கொடுமைகள் இன்றும் பல்வேறு விதங்களில் தொடர்வதைக் கண்கூடாகப் பார்க்க முடிந்தது.*



*இந்தக் கணக்கெடுப்புப் பணிகளின் போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முடி திருத்த அனுமதி மறுக்கப்படுவதையும், கோயில்களில் நுழைய அனுமதி மறுக்கப்படுவதையும் மக்கள் வேதனையுடன் பதிவு செய்தனர். மேலும் பழனி அய்யம்பாளையத்தில் உள்ள சத்துணவுக் கூடத்தில் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் தனித்தனியாக அமர வைத்து உணவுப் பரிமாறப்படுகிறது என்ற அதிர்ச்சித் தகவலும் நமக்குக் கிடைத்தது.*

*கோவை பொத்தியாம்பாளையத்தில் உள்ள பொது சுடுகாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் சடலங்களைப் புதைக்க அனுமதி மறுக்கப்படுவதால் சுமார் 1.5 கி.மீ தூரம் சென்று ஒரு ஓடைப்பள்ளத்தில் புதைக்கும் அவலநிலை இன்றும் தொடர்வதாக அப்பகுதி மக்கள் கூறினார்கள். கோவை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் உணவகங்களில் பிற்படுத்தப்பட்டவர்களுடன் அமர்ந்து சாப்பிட அனுமதி மறுப்பு - இரட்டைக்குவளை முறை - முடி திருத்த அனுமதி மறுப்பு - கோயிலில் நுழைய அனுமதி மறுப்பு உள்ளிட்ட தீண்டாமைக் கொடுமைகள் அதிகமாக இருப்பதைக் கோவை மாவட்டச் செயல்வீரர்களால் எடுக்கப்பட்ட பட்டியலின் மூலம் அறிய முடிந்தது.*

*இதில் முதல்கட்டமாகத் திண்டுக்கல், கோவை மாவட்டங்களில் எடுக்கப்பட்ட பட்டியலைத் தலைமைக்கு அனுப்பி வைத்தனர். அதனை தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையத் துணைத் தலைவர் புனித பாண்டியன் அவர்களிடம் 30.08.2024 அன்று கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் வழங்கி, இத்தகைய தீண்டாமைக் கொடுமைகளைக் களைந்திட அரசு முனைய வேண்டுமென்று வலியுறுத்தினார்.*

*இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் உமாபதி, கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், தென் சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், வட சென்னை மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு இராசேந்திரன், தென் சென்னை மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், சிகாமணி, இராஜன், தினகரன், சூர்யா, அழகிரி, அன்னூர் விஷ்ணு உள்ளிட்ட கழகத் தோழர்கள் உடனிருந்தனர்.*

***(மற்ற மாவட்டங்களில் இருந்தும் பட்டியலை விரைந்து அனுப்பிடுவீர்)***

# தமிழ்நாட்டின் கல்வி உரிமையைப் பாதுகாத்திட மாவட்டத் தலைநகரங்களில் கழகம் ஆர்ப்பாட்டம்

**மாநில உரிமையைக் காப்போம்!**
**கல்வி உரிமையை மீட்போம்!**

*எனும் முழக்கத்தோடு தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தடை செய்ய நினைக்கிற, பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம்!*

*கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை!*

*அன்பு தோழர்களுக்கு, வணக்கம். அண்மைக் காலமாக ஒன்றிய அரசும் ஒன்றிய அரசின் முகவராக தமிழ்நாட்டில் செயல்படும் ஆளுநர் ஆர்.எஸ்.எஸ். ரவியும் கல்வியில் முன்னேறி உள்ள தமிழ்நாட்டின் கல்வி நிலையைச் சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள்.*

*ஒன்றிய அரசின் கல்வித் துறை இந்த ஆண்டு கல்வி நிலையங்களின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.*

*அதில் இந்தியாவின் சிறந்த பல்கலைக் கழகங்கள் 100இல் 22 தமிழ்நாட்டில் இருப்பதையும், சிறந்த கல்லூரிகள் 100இல் 37உம், சிறந்த பொதுப் பல்கலைக் கழகங்கள் 50இல் 10உம், சிறந்த 100 பொறியியல் கல்லூரிகளில் 13உம், சிறந்த ஆய்வு நிறுவனங்கள் 50இல் 9உம் தமிழ்நாட்டில் இருப்பதை வெளியிட்டிருக்கிறார்கள்.*

*ஆனால் நமது ‘அறிவாளி’ ஆளுநர் ஆர்.எஸ்.எஸ். ரவியோ தமிழ்நாட்டின் கல்வித் தரம் கீழ்நிலையில் இருக்கிறது எனத் திருவாய் மலர்ந்திருக்கிறார். தரவரிசைப் பட்டியலில் தங்களுடைய கட்சியான*



*பாரதிய ஜனதா கட்சி ஆளுகிற மாநிலங்களில் நிலையை அறிந்து பேசி இருந்தால், உண்மையைப் பேசியிருந்தால் இவ்வாறு பேசியிருக்க மாட்டார்.*

*தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு ஐரோப்பிய நாடுகளுக்கு இணையாக 1000 பேருக்கு 4 மருத்துவர்களுக்கு மேலாகக் கொண்டிருக்கிறது. எல்லாப் பிரிவினரும் மருத்துவராகப் பணியாற்றிவரும் நிலையில் கிராமப்புற, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, ஏழ்மையில் இருக்கிற நம் மக்களின் கல்விக் கனவைச் சிதைக்கும் வகையில் நீட் என்ற தேர்வு கொண்டு வரப்பட்டது. இப்போது எம்.பி.பி.எஸ். படிப்பின் முடிவில் நெக்ஸ்ட்1 என்ற தேர்வும், அதில் தேர்வு என்றால் மட்டுமே ஹவுஸ் சர்ஜன் ஆக பணியாற்ற முடியும் என்பதையும், அந்தக் காலம் முடிவுற்றபின் மீண்டும் நெக்ஸ்ட் 2 தேர்வு எழுதினால் மட்டுமே மருத்துவராகப் பதிவு செய்ய முடியும் என்பதோடு, முதுநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வையும் எழுத முடியும் என்று மேலும் மேலும் தடைகளை இட்ட வண்ணம் இருக்கிறது.*

*இன்னொரு பக்கம் ஒன்றிய அரசின் தேசியக் கல்விக் கொள்கை என்கிற 3ஆம் 5ஆம் 8ஆம் வகுப்பினர் கூட பொதுத் தேர்வு என்ற விதிகளையும், இந்தி உள்ளிட்ட மும்மொழிக் கொள்கையும் சமஸ்கிருதத்தையும் படிக்க வேண்டும் என்றும், குறைவான மாணவர் பயிலும் பள்ளிகளைக் கல்வி வளாகம் எனப் பெரிய பள்ளியோடு இணைப்பது என்பதன் வழியாகச் சாதாரண கிராம சமூகத்தில் பின்தங்கி இருக்கிற மாணவர்கள் நெடுந்தொலைவு நடக்க வேண்டிய கட்டாயத்தை உருவாக்கி அவர்களுடைய கல்வியில் பெருந்தடையும் ஏற்படுத்தி வைத்திருக்கிறது. அந்தத் தேசியக் கல்விக் கொள்கையை ஏற்காததால் கல்விக்கான நிதியை நிறுத்தி இருக்கிறது ஒன்றிய அரசு.*


*இவ்வாறு பல்வேறு வகைகளில் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தடை செய்ய நினைக்கிற பழிவாங்கும் நடவடிக்கைகளைக் கண்டித்து எதிர்வரும் 10.09.2024 செவ்வாய் அன்று எல்லா மாவட்டத் தலைநகர்களிலும், வாய்ப்புள்ள பிற இடங்களிலும், ஒத்த கருத்துள்ள இயக்கங்களை, தோழர்களை இணைத்துக் கொண்டு கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்துமாறு அன்புடன் வேண்டுகிறோம்.*

**மாநில உரிமையைக் காப்போம்!**
**கல்வி உரிமையை மீட்போம்!**

***- கொளத்தூர் மணி,***
***தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்.***
***04.09.202024.***

தலையங்கம்

# பெரியார் மானுடத்தின் திறவுகோல்



பெரியார் தொடங்கிய குடி அரசுக்கு வயது 100; 1925இல் தொடங்கப்பட்ட இந்தப் பத்திரிக்கை பார்ப்பனரல்லாத சமூகத்தின் புரட்சிகர மாற்றத்திற்கு வித்திட்டது என்பதை மறுத்துவிட முடியாது. பெரியார் முதல் சுயமரியாதை மாநாட்டை 1929இல் நடத்தினார். அதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னரே குடிஅரசு தனது பயணத்தைத் தொடங்கிவிட்டது. இது மானத்திற்கான மீட்புக்களம்.

பார்ப்பனர் – பார்ப்பனரல்லாதார் என்ற போராட்டக் களத்தை முன்னெடுத்து அதை மக்கள் இயக்கமாக மாற்றிய பெருமை சுயமரியாதை இயக்கத்திற்கும் குடிஅரசு ஏட்டிற்கும் உண்டு. பார்ப்பன ஆதிக்கம் முழு வீச்சில் இருந்த காலகட்டம் அது. அப்போது பார்ப்பனரல்லாத மக்களின் மானத்தையும், அறிவையும் மீட்பதற்காகப் பெரியார் களம் இறங்கினார். மானம் பெறுவதற்கு சூத்திர இழிவிலிருந்து விடுதலைக் கோரினார். அந்த இழிவைக் கடவுள், மதம், சாஸ்திரம், சம்பிரதாயம், பழக்கவழக்கம் என்ற நம்பிக்கைகளின் வழியாகத் திணிக்கப்பட்டதை உறுதியோடும் அச்சமின்றியும் எதிர்த்து நின்றார்.

அறிவுக்கான மீட்புக் களத்தில் அவர் முன்வைத்த முழக்கம் வகுப்புரிமை எனும் இட ஒதுக்கீடு. நீதிக்கட்சி ஆட்சி பின்பற்றிய இட ஒதுக்கீட்டுக் கொள்கை, பார்ப்பன சுதந்திர இந்தியாவில் நீதிமன்றத்தால் பறிக்கப்பட்டபோது தமிழ்நாட்டில் இருந்து போர்க்குரல் எழுந்தது. அந்தக் குரலை எழுப்பியவர் பெரியார். திமுக அதை வழி மொழிந்தது. அரசியல் சட்டம் முதல் முறையாகத் திருத்தப்பட்டது. நாடாளுமன்றத்துக்குள்ளே செல்லாத பெரியார் வெளியே நின்று இதை மக்கள் இயக்கத்தின் வலிமையால் சாதித்துக் காட்டினார்.

பார்ப்பனரல்லாத சமுதாயத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்த அதிகாரக் கட்டமைப்பை உடைத்தெறிந்தது இந்த இட ஒதுக்கீடு எனும் வகுப்புவாரி உரிமை. அன்று பார்ப்பனர்களின் பிடியில் இருந்த காங்கிரஸ் இட ஒதுக்கீட்டைக் கடுமையாக எதிர்த்தது. இன்று அதே காங்கிரஸ் பண்பு மாற்றத்திற்கு உள்ளாகி இட ஒதுக்கீட்டை உரத்து முழங்குகிறது.

இட ஒதுக்கீடு பொருளாதார அடிப்படையிலேயே வழங்கப்பட வேண்டும் என்ற வர்க்கப் பார்வையை முன்வைத்த பொதுவுடமைக் கட்சிகள் இன்று பெரியாரின் சமூகநீதிப் பார்வையை ஏற்றுக்கொண்டுள்ளது வரவேற்கத்தக்க மாற்றமாகும்.

கடந்த வாரம் கேரள மாநிலம் பாலக்காட்டில் மூன்றுநாள் ஆர்.எஸ்.எஸ் மாநாடு நடந்து முடிந்திருக்கிறது. அதில் ஜாதிவாரிக் கணக்கெடுப்பிற்கு நிபந்தனையுடன் ஆதரவளித்தது ஆர்.எஸ்.எஸ். ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை வழங்குவதற்கு இந்த ஜாதிவாரிக் கணக்கெடுப்புத் தேவை என்று அந்தக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் சுனில் அம்பேத்கர் கூறியிருக்கிறார். ஆனால் இந்தக் கணக்கெடுப்பை அரசியலுக்குப் பயன்படுத்தக் கூடாது என்று நிபந்தனை விதித்திருக்கிறார். ஆக ஜாதிவாரிக் கணக்கெடுப்பிற்கு ஆர்.எஸ்.எஸ். பச்சைக் கொடி காட்டியிருக்கிறது. ஒன்றிய ஆட்சி இதற்குப் பிறகு ஜாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த முன்வருமா? என்ற கேள்வி இப்போது எழுந்திருக்கிறது.

வர்ணாசிரமம் வழியாகப் பார்ப்பனிய மனுதர்மம் திணித்த கொடூரமான சமூக அமைப்பை உடைத்து அனைவருக்கும் சமூகநீதியைப் பகிர்ந்தளிப்பது தான் ஜாதிவாரிக் கணக்கெடுப்பு. சமூக சமத்துவத்திற்குத் தடைக்கற்களாகப் பெரியார் அடையாளம் காட்டியக் கொள்கைகளே இன்று அரசியலில் மையப் பொருளாக வலிமையுடன் நிலைபெற்று நிற்கிறது. இந்து தேசிய அரசியலை நோக்கமாகக் கொண்டுள்ள ஆர்.எஸ்.எஸ், ஓர் உண்மையை இப்போது ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்து சமூகம் ஜாதிகளால் சிதறுண்ட சமூகம், இதைச் சமப்படுத்த பெரியார் பேசிய வகுப்புரிமை தான் மாமருந்து என்பதே இப்போது ஆர்.எஸ்.எஸ். வெளியிட்ட கருத்தின் உள்ளடக்கம். இது பெரியாரியலுக்கு கிடைத்த வெற்றி.

இப்போது தான் கடவுள், மத நம்பிக்கைகள் அதிகரித்துவருகின்றன என்று பெரியாரிய எதிர்ப்பாளர்கள் முன்வைக்கும் வாதம் அர்த்தமற்றது என்பதே நமது கருத்து. ‘‘தனக்கு விதிக்கப்பட்ட தலைவிதி இதுதான்’’ என்று பார்ப்பனிய அடிமைகளாகத் தங்களை ஒப்படைத்துக் கொண்டிருந்த மக்கள் இன்றைக்கு இல்லை. மக்கள் அந்த நம்பிக்கைகளை ஓரம்கட்டிவிட்டு வாழ்வுரிமை – கல்வி உரிமை – தன்மானத்திற்காகப் போராடத் தொடங்கிவிட்டார்கள். கடவுளிடமும் மதச் சடங்குகளிடமும் இந்த உரிமைகளை அடகு வைப்பதற்கு மக்கள் தயாராக இல்லை. இதுவே இன்றைய வாழ்க்கையின் எதார்த்தம். ‘‘பெண்களுக்கு கல்வித் தரக்கூடாது; கடல் கடந்து செல்வது பாவம்; விதவைகள் மறுமணம் புரியக் கூடாது’’ என்று சனாதனம் கடைப்பிடித்தக் கொள்கைகள் இன்று காற்றில் பறந்துவிட்டன. இது சனாதனம் சரியத் தொடங்கியிருக்கிறது என்பதன் வெளிப்பாடு.

பெரியார் பேசிய பெண்ணுரிமை இன்று கல்வி கற்ற பெண்களின் அடையாளமாகி வருகிறது. ‘‘நாங்கள் ஏன் அடிமைகள்?’’ என்ற கேள்விகளோடு பெண்கள் பயணிக்கத் தொடங்கிவிட்டனர். பெண்களுக்காகவே உரிமைத் திட்டங்களை அரசுகள் செயல்படுத்தத் தொடங்கிவிட்டன. இது மனுதர்மத்திற்குக் கிடைத்த மரண அடி.

பெரியார் காண விரும்பிய அறிவியல் இன்று உலகத்தையே புரட்டிப் போடுகிறது. மருத்துவம், உற்பத்தி, பண்பாடுகளில் மாற்றங்களை நிகழ்த்தி வருகிறது செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம். மரபணுக்களை எடிட் செய்து மாற்றிவருகிறது இந்தத் தொழில்நுட்பம். அமெரிக்கப் பயணத்தில் ஓட்டுநர் இல்லாத காரில் பயணித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், பெரியாரின் இனி வரும் உலகம் நூலின் கருத்துகளை இணைத்துத் தனது சமூக வலைதளப்பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

இந்தச் சமூகத்தின் பாய்ச்சலைத் தடுத்து நிறுத்தி மீண்டும் பழமைக்கே இழுத்துச் செல்லும் முயற்சிகள் மற்றொரு பக்கம் தீவிரமடைந்து வருகின்றன. அறிவியலைப் பயன்படுத்திக் கொண்டே மக்களைக் குழப்பும் இந்த முயற்சிகள் திட்டமிட்டு அரங்கேறி வருகின்றன. கிராமங்களில் ஜாதியப் பாகுபாடுகள் தொடர்கின்றன. இதற்கு அரசியல் துணைப் போகிறது. இந்தத் தடைகளைத் தகர்த்து பெரியாரியலை வேகமாக முன்னெடுக்கும் செயல்திட்டங்களோடு மக்களைச் சந்திக்க உறுதியேற்பது, சமூக மாற்றத்திற்காகச் செயல்படும் ஒவ்வொருவரின் கடமையாகும். பெரியாரின் பிறந்தநாளில் நாம் ஏற்க வேண்டிய உறுதிமொழி இதுவாகவே இருக்கும். ஆம்! பெரியார் மானுடத்தின் திறவுகோல்.

# வினா விடை

• *பசு மாட்டைக் கடத்தியதாகக் கூறி அரியானாவில் பள்ளி மாணவனை பசுப் பாதுகாவலர்கள் சுட்டுக் கொன்றனர்.* *– செய்தி*

பேசாம, ஒவ்வொரு பசுவுக்கும் துப்பாக்கி ஏந்திய பாதுகாப்பு போட்ருங்க, அப்போ தான் மனிதர்களாவது உயிர் பிழைக்க முடியும்.

• *ஒரே இடத்தில் விநாயகன் சிலை அமைப்பதில் இந்து அமைப்புகளுக்குள் மோதல்.* *– செய்தி*

விநாயகா..! இந்துக்களையே இப்படி மோதவிடுகிறாயே, இது நியாயம் தானா?

• *ஸ்ரீரங்கம் கோயில் பிரசாதம் தயாரிக்கும் உரிமை தென்கலை பிராமணர்களிடமே இருக்கலாம் – உயர்நீதிமன்றம் தீர்ப்பு.*

அதேப்போல் துப்பரவு பணியையும் தென்கலையிடமே குடுத்துருங்க, வடகலை எதிர்ப்பும் இருக்காது.

• *தமிழ்நாட்டு பள்ளிப் பாடத்திட்டத்தின் தரம் குறைந்து விட்டது.* *– ஆளுநர் ரவி*

சரி, தரம்தாழ்ந்து கிடக்கும் ஆளுநர் பதவியை என்ன செய்வது?

# சேலத்தில் இளைஞர் - மகளிர் - மாணவர் அணிகள் கலந்துரையாடல்



*சேலம் : சேலம் மாவட்டக் கழக இளைஞரணி – மகளிர் அணி மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 01.09.2024 இளம்பிள்ளை நேரு,வேடியப்பன் இல்லத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. சேலம் (கி) மாவட்டச் செயலாளர் டேவிட் முன்னிலை வகித்தார்.*

*கடவுள் மறுப்பு வாசகத்துடன் தொடங்கிய இந்தக் கூட்டத்தில் கழகத் தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன், சேலம் (கி) மாவட்ட அமைப்பாளர் ஏற்காடு பெருமாள், சேலம் (மே) மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, நங்கவள்ளி ஒன்றியப் பொறுப்பாளர் கிருஷ்ணன், சேலம் தமிழரசன் ஆகியோர் இளைஞர்கள் மத்தியில் தங்களது கள அனுபவங்களையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர்.*

*நிறைவாகக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். மேலும் சேலம் மாவட்டக் கழக இளைஞரணி – மகளிர் அணி மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகக்த்திற்குப் புதியப் பொறுப்பாளர்களை நியமித்தார். அவை பின்வருமாறு:–*

*மாவட்ட இளைஞர் அணித் தலைவராக ஏற்காடு தேவபிரகாஷ், மாவட்ட இளைஞர் அணிச் செயலாளராக நங்கவள்ளி பிரபாகரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்களாக இளம்பிள்ளை தங்கதுரை, சேலம் வெற்றிமுருகன், வெள்ளார் சிவ சண்முகம், மேட்டூர் திவாகர், மேட்டூர் RS சுசீந்திரன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.*

*சேலம் மாவட்டத் தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர்களாக மேட்டூர் RS பகுதி நாகராஜ், காவலாண்டியூர் சந்தோஷ், கொங்கணாபுரம் கவியரசு, ஏற்காடு சரிதா, ஏற்காடு ஜாஸ்மின் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.*

*சேலம் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்களாக கொளத்தூர் சுதா, இளம்பிள்ளை திவ்யா, காவலாண்டியூர் சரசுவதி ஆகியோர் நியமிக்கப்பட்டனர். மேலும் தாரமங்கலம் ஒன்றிய அமைப்பாளராக பவளத்தானூர் சரவணன், இளம்பிள்ளை நகரச் செயலாளராக மோகன் ராஜ் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.*

*சேலம் மாவட்ட இளைஞரணித் தலைவர் ஏற்காடு தேவபிரகாஷ் நன்றி கூறக் கூட்டம் நிறைவுபெற்றது.*

**பெரியார் படமல்ல!**
**மாற்றத்தின் திறவுகோல்!!**

செப்டம்பர் 17, தலைவர் பெரியாரின் 146ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் கழக சார்பில் ஒட்டுவதற்காக சுவரொட்டி (wall Poster) வடிவமைப்பு தயாரானது!



# காவிமயத்தில் கரையும் கல்வித்துறை!

ர.பிரகாசு

ஒன்றிய அரசின் புதியக் கல்விக் கொள்கையைத் தமிழ்நாடு அரசு நிராகரித்ததால் கட்டாயக் கல்வி (சர்வ சிக்சா அபியான்) சட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய நிதியை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்திருக்கிறது. இத்திட்டத்திற்கான நிதியில் 60 விழுக்காடு ஒன்றிய அரசும், 40 விழுக்காடு மாநில அரசும் பங்களிப்புச் செய்கின்றன. அதன்படி பார்த்தால் 2024-25 கல்வி ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ஒன்றிய அரசு 4 தவணைகளில் ரூ.2,152 கோடி வழங்க வேண்டும். கடந்த ஜூன் மாதமே ஒன்றிய அரசு முதல் தவணையாக ரூ.573 கோடியை வழங்கியிருக்க வேண்டும். இதை வழங்கக்கோரி தமிழ்நாடு அரசு பல முறை கடிதம் எழுதியுள்ளது. ஆனால் ஒன்றிய அரசிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை, என்றும் கடந்த சில மாதங்களாக மாநில அரசின் முழுமையான நிதியில்தான் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி குற்றச்சாட்டை வைத்துள்ளார்.

### கைவிரிக்கும் பாஜக அரசு

தமிழ்நாட்டிற்கு மட்டுமின்றி மேலும் சில மாநிலங்களுக்கும் முதல் தவணை விடுவிக்கப்படவில்லை. இதனைச் சுட்டிக்காட்டி பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மாணவர்களின் நலன் கருதி நிதியை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசின் கூட்டுப் பங்களிப்போடு செயல்படுத்தப்படும் பல திட்டங்களுக்கு பாஜக அரசு தொடர்ச்சியாக நிதியைக் குறைப்பதை வாடிக்கையாக்கிக் கொண்டிருக்கிறது. பிரதமர் வீடு, மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், மருத்துவக் கல்லூரிகள் கட்டுமானம், தூய்மை இந்தியா, அம்ருத் 2.0 என ஒன்றிய புதிய திட்டங்களைத் தொடங்கும்போது கொடுக்கும் பங்களிப்பு அதிகமானதாகவும், நாளடைவில் அதற்கு மாநில அரசுகளே அதிக நிதியை ஒதுக்க வேண்டிய நெருக்கடியும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

அந்த வகையில்தான் சென்னை மெட்ரோ ரயில் கட்டுமானப் பணிகளுக்கான ஒன்றிய அரசின் நிதி ஒரு ரூபாய் கூட விடுவிக்கப்படாததைப் போல, கட்டாயக் கல்வி திட்டத்துக்கான நிதியும் கடந்த சில மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. கட்டாயக் கல்வித் திட்டம் மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாகவே நாட்டின் கல்வித்துறை பாஜக ஆட்சியில் பாதாளத்தில் வீழ்ந்து கொண்டிருக்கிறது. 2014ஆம் ஆண்டில் பாஜக ஆட்சிக்கு வருவதற்கு முன்பு இந்தியப் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்துவோம், நாட்டில் பாலாறும் தேனாறும் ஓடும் என்றும் அளித்த பல வாக்குறுதிகளில் கல்வியில் எல்லோருக்கும் சம வாய்ப்பு, பெண் குழந்தைகளின் கல்விக்கு அதிக முக்கியத்துவம், ஆசிரியர்கள், ஆய்வாளர்களின் பற்றாக்குறை போக்கப்படும், ஜிடிபியில் கல்விக்கு 6% நிதி ஒதுக்கப்படும் என்பதும் மிக முக்கியமான வாக்குறுதிகள்.

### கொத்துக்கொத்தாக மூடப்படும் பள்ளிகள்

ஆனால் 2014 முதல் 2024 வரையிலான பாஜக ஆட்சிக்காலத்தில் கல்வித்துறை சந்தித்தது பேரழிவு மட்டுமே. Financial Accountability Network India (FAN) நடப்பாண்டு ஏப்ரலில் வெளியிட்ட ஆய்வறிக்கை இதை உணர்த்துவதாக உள்ளது. அரசுப் பள்ளிகளை இணைத்து எண்ணிக்கையைக் குறைப்பது பாஜக கொண்டு வந்த புதிய கல்விக்கொள்கைத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள். அதன்படி 2023ஆம் ஆண்டில் மட்டும் 4,000க்கும் அதிகமான பள்ளிகள் நாடு முழுவதும் இணைக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் எண்ணிக்கைக் குறைவாக இருக்கும் பள்ளிகளை மூடிவிட்டு, அருகில் இருக்கும் வேறு பள்ளியுடன் இணைப்பது இத்திட்டம். தொலைதூர கிராமங்கள், மலைப்பகுதிகளில் மாணவர்கள் எண்ணிக்கைக் குறைவாக இருந்தாலும், அருகாமையிலேயே பள்ளி இருக்க வேண்டுமென்ற நோக்கத்தில் தொடங்கப்பட்டிருக்கும். ஆனால் அவற்றை மூடிவிட்டு, அங்கிருந்து சில கிலோமீட்டர் தொலைவில் அதிக மாணவர்கள் இருக்கும்



பள்ளியுடன் இணைப்பதால், தொலைதுர, மலைக்கிராம மாணவர்களின் கற்றல் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. இது கட்டாயக் கல்விச் சட்டத்தின் நோக்கத்திற்கு முற்றிலும் முரணானது.

இவ்வாறு மகாராஷ்டிர மாநிலத்தில் மட்டும் சுமார் 2 இலட்சம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேபோல ஒடிசாவில் 7,438 பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. மத்தியப் பிரதேசத்தில் 35,000 பள்ளிகளை ஒன்றோடு

(நாடு முழுவதும் 2018 - 19ஆம் ஆண்டில் 15,51,000ஆக இருந்த பள்ளிகளின் எண்ணிக்கை 2021-22ஆம் ஆண்டில் 14,89,115ஆகக் குறைந்துவிட்டது என்பது இந்த ஆய்வறிக்கை தருகின்ற பேரதிர்ச்சி செய்தி. இவ்வாறு மூடப்பட்ட 61,885 பள்ளிகளில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் நடத்தப்படும் பள்ளிகளின் எண்ணிக்கை மட்டுமே 61,361)

ஒன்று இணைக்கப்பட்டு 16,000ஆகக் குறைக்க முன்மொழியப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக நாடு முழுவதும் 2018-19ஆம் ஆண்டில் 15,51,000ஆக இருந்த பள்ளிகளின் எண்ணிக்கை 2021-22ஆம் ஆண்டில் 14,89,115ஆகக் குறைந்துவிட்டது என்பது இந்த ஆய்வறிக்கை தருகின்ற பேரதிர்ச்சி செய்தி. இவ்வாறு மூடப்பட்ட 61,885 பள்ளிகளில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் நடத்தப்படும் பள்ளிகளின் எண்ணிக்கை மட்டுமே 61,361.

அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கைக் குறைந்துவரும் அதேவேளையில் தனியார் பள்ளிகள் புற்றீசல் போல பெருகிக் கொண்டும் வருவதும் ஒன்றிய பாஜக அரசின் கல்விக்கொள்கை யாருக்குச் சாதகமாக இருக்கிறது என்ற கேள்வியை எழுப்புகிறது. எடுத்துக்காட்டாக, 2014-15ஆம் ஆண்டில் நாட்டில் 11, 07,118 அரசுப் பள்ளிகளும், 83,402 அரசு உதவி பெறும் பள்ளிகளும் இருந்தன. ஆனால் 2021-22ஆம் ஆண்டில் அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கை 10,22,386-ஆகவும், அரசு உதவி பெறும் பள்ளிகளின் எண்ணிக்கை 82,480-ஆகவும் சுருங்கிவிட்டது. ஆனால் இதேகாலகட்டத்தில் தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை 2,88,164-இல் இருந்து 3,35,844-ஆகப் பெருகியிருக்கிறது.

### உதவித்தொகை நிறுத்தம்; சேர்க்கை சரிவு

அதேபோல ஆசிரியர் பற்றாக்குறையும் 10 இலட்சத்திற்கு அதிகமாக இருப்பதாக, நாடாளுமன்ற நிலைக்குழுவின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. 45 மத்திய பல்கலைக்கழகங்களில் 33 விழுக்காடு ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. ஐ.ஐ.டி.-களில் 40 விழுக்காடு, ஐ.ஐ.எம்.-களில் 31.6 விழுக்காடு ஆசிரியர் பணியிடங்களும் காலியாக உள்ளன. 103.39 ஆக இருக்கும் தொடக்கக்கல்வி மாணவர் சேர்க்கை விகிதம் உயர்நிலை வகுப்புகளில் 57.56 சரிந்துவிடுவதாகவும் FAN அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதில் கடுமையாக பாதிக்கப்படுபவர்கள் பட்டியல், பழங்குடி, பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மை சமூக மாணவர்களே. குறிப்பாக பட்டியல் சமூகத்தினரின் மாணவர் சேர்க்கை விகிதம் தொடக்கக் கல்வியில் 113.1ஆக இருக்கிறது என்றால் உயர்நிலைக் கல்வியில் 61.49ஆகச் சரிந்துவிடுகிறது. பழங்குடி சமூகத்தினரின் மாணவர் சேர்க்கை விகிதம் தொடக்கக் கல்வியில் 106.5-ஆக இருக்கிறது என்றால் உயர்நிலைக் கல்வியில் 52.02-ஆகச் சரிந்துவிடுகிறது.

ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி., மற்றும் சிறுபான்மை சமூக மாணவர்களுக்கான உதவித்தொகை 2022-23 கல்வியாண்டில் நிறுத்தப்பட்டுவிட்டது. இதுவே உயர்கல்வியைப் பார்க்கும்போது நிலைமை மேலும் மோசமாகியிருக்கிறது. M.Phil, PhD படிக்கும் சிறுபான்மை சமூக மாணவர்களுக்கு மவுலானா ஆசாத் பெயரில் தேசிய அளவிலான உதவித்திட்டம் நீண்டகாலமாகச் செயல்படுத்தப்பட்டு வந்தது. இது சிறுபான்மை சமூக மாணவர்களின் ஆய்வுப் படிப்புகளுக்கு பேருதவியாக இருந்துவந்தது. ஆனால் மோடி அரசாங்கம் 2022ஆம் ஆண்டில் இத்திட்டத்தை நிறுத்திவிட்டது. அதேபோல தொழில் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த படிப்புகளுக்கு தகுதி அடிப்படையில் உதவித்தொகை வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. 2014-15-ஆம் ஆண்டில் 243 கோடி ரூபாயாக இருந்த இத்திட்டத்திற்கான நிதி 2024-25ஆம் ஆண்டில் வெறும் 33.80 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

### காவிமயமாகும் கல்வித்துறை

2013-14 நிதியாண்டில் பள்ளிக்கல்வித்துறைக்கு ஒட்டுமொத்த பட்ஜெட்டில் 3.16 விழுக்காடு ஒதுக்கப்பட்ட நிலையில், ஒன்றிய பாஜக அரசு கடந்த 10 ஆண்டுகளில் அதனைப் படிப்படியாகக் குறைத்து 2024-25 நிதியாண்டில் 1.53% ஆகச் சுருக்கிவிட்டது. இவற்றை பாஜகவின் நிர்வாகத் திறனின்மை என்ற அளவுகோலில் வைத்து பார்த்துவிட முடியாது. பாஜகவின் இந்துத்துவ சித்தாந்தத்தோடுதான் இவற்றைத் தொடர்புப்படுத்திப் பார்க்க வேண்டும். மீண்டும் வேத காலத்திற்குத் திரும்புவோம், ராமராஜ்ஜியம் அமைப்போம் என்பதே பாஜக, இந்துத்துவவாதிகளின் பெரும் முழக்கமாக இருக்கிறது. அந்தவகையில் பார்த்தோமானால், சூத்திரனும் - பஞ்சமனும் கல்வி கற்க உரிமை அற்றவர்கள் என்பதுதான் வேதம் சொல்லும் நியதி. ஓதுதலும் ஓதுவித்தலும் பார்ப்பனரின் பணி என்பதே வேதம் சொல்லும் நியதி.

பள்ளிக்கூடங்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதும், ஆசிரியர்கள் போதுமான எண்ணிக்கையில் இருப்பதும், கல்வித்துறைக்கான போதுமான நிதியும் ஒதுக்கப்படுவதும் பாஜகவின் விரும்பும் வேத காலத்தை அமைத்துத் தராது என்பது தெளிவு. அதனால்தான் பள்ளிக்கூடங்கள் மூடப்படுகின்றன. ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில்லை, நிதி ஒதுக்கப்படுவதில்லை. அதையும் மீறி படிக்கச் செல்வோரும் இந்துத்துவக் கொள்கைகளுக்கு எதிரான எதையும் கற்றுவிடக் கூடாது என்பதிலும் பாஜக தெளிவோடு இருக்கிறது என்பதையும் புரிந்துகொள்ளத்தக்க சில சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. குறிப்பாக குஜராத் மாநிலப் பாடத்திட்டத்தில் காந்தியடிகளைக் கொன்றவர் கோட்சே என்பதை மறைக்கும் வகையில் திருத்தம் செய்யப்பட்டது. காந்தியடிகள் கொலையைத் தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ். இயக்கம் தடை செய்யப்பட்ட வரலாறும் நீக்கப்பட்டது. முகலாயர் ஆட்சிக்காலம் குறித்த பாடப்பிரிவுகள் பாஜக ஆளும் மாநிலங்களில் திட்டமிட்டு நீக்கப்படுவதும், குறைக்கப்படுவதும் நடந்தது. தலித்திய செயற்பாட்டாளர்களின் எழுத்துக்கள், கவிதைகள், ஜாதியப் பாகுபாடுகளை விவரிக்கும் பாடங்கள், சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தும் பாடங்களும் நீக்கப்பட்டுள்ளன.

ஆக, கடந்த 10 ஆண்டுகளில் பாஜக ஆட்சியில் கல்வித்துறை எதிர்கொள்ளும் நெருக்கடிகள் ராஜாஜி ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டில் திணிக்கப்பட்ட குலக்கல்வியை முறையை விட பேராபத்து நிறைந்தது. அந்தப் பேராபத்துகள் மூன்றாவது முறையாக மோடி ஆட்சியமைத்த பின்னர் பன்மடங்கு வேகமெடுத்திருக்கிறது. கட்டாயக் கல்வி சட்டத்திற்குக் கூட நிதியை விடுவிக்க மறுப்பது அதைத்தான் உணர்த்துகிறது.

தகவல்கள்: Financial Accountability Network India (FAN-India)-இன் ‘Education Report Card – 2014-24’.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங்கள் நிறைவு!



**திண்டுக்கல்:** திண்டுக்கல் - தேனி மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 22.08.2024 அன்று பழனி அ.கலையம்புத்தூரில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், கழகப் பொருளாளர் சு.துரைசாமி, கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசிகுமரன், கழகத் தலைமைக்குழு உறுப்பினர்கள் சூலூர் பன்னீர்செல்வம், இரா.உமாபதி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பேசிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கடந்த ஒரு ஆண்டாகத் திண்டுக்கல் மாவட்டக் கழகச் செயல்பாடுகள் பாராட்டுக்குரியது என்றும், இணையதள செயல்பாடுகளில் கழகத்திற்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது என்றுப் பேசினார்.

கூட்டத்தின் முடிவில் திண்டுக்கல் - தேனி மாவட்டப் பொறுப்பாளர்களைக் கழகத் தலைவர் அறிவித்தார். அவை பின்வருமாறு:-

திண்டுக்கல் மாவட்டத் தலைவராக மருதமூர்த்தி, மாவட்டச் செயலாளராக மாக்சிம் கார்க்கி, மாவட்ட அமைப்பாளர் மற்றும் இணையதளப் பொறுப்பாளராக ராஜா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளராக நாச்சிமுத்து, தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளராக ஆயுதன், ஒட்டன்சத்திரம் ஒன்றியத் தலைவராக கபாலி, ஒன்றியச் செயலாளராக ஜோசப், ஒன்றிய அமைப்பாளராக சக்திவேல், பழனி ஒன்றியத் தலைவராக ராஜசேகர், ஒன்றியச் செயலாளர் கிருஷ்ணன், ஒன்றிய அமைப்பாளர் பெரியார், நத்தம் ஒன்றிய அமைப்பாளர் தங்கத் தமிழ்க்குமரன், ஆயக்குடி பேரூர் கழக அமைப்பாளராக ஜெயசங்கர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

தேனி மாவட்டக் கழக அமைப்பாளராக தேனி ராயன் நியமிக்கப்பட்டார்.

இதில் லல்லு பிரசாத், அலெக்ஸ், சந்தோஷ், சசிக்குமார், சரவணக்குமார், சஞ்சய், மதன்குமார், மூர்த்தி, கார்த்தீஸ்வரன், கருணாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும் தேனியைச் சேர்ந்த சந்திரன், ஜெகதீசன், சிவக்குமார், காளியப்பன் ஆகியோர் கழகத்தில் இணைந்தனர்.

கபாலி நன்றி கூறக் கூட்டம் நிறைவு பெற்றது.



**தூத்துக்குடி:** தூத்துக்குடி மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 24.08.2024 அன்று தூத்துக்குடி பழைய பேருந்து நிலையம் அருகேயுள்ள வேலவன் தங்கும் விடுதியில் நடைபெற்றது.

கலந்துரையாடல் கூட்டம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், கழகப் பொருளாளர் திருப்பூர் சு.துரைசாமி, கழக பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

கலந்துரையாடல் கூட்டத்தின் நோக்கம் குறித்து கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் விளக்கிப் பேசினார்.

மேலும் ஆழ்வை ஒன்றியச் செயலாளர் ஆழ்வை இரா. உதயக்குமார், தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர் முத்தலாபுரம் கண்ணதாசன், மாவட்டத் துணைச் செயலாளர் சூரங்குடி மாரிச்சாமி, ஏர்வாடி பால்வண்ணன், பால்.அறிவழகன், மாநகரப் பொறுப்பாளர் ச.தா. பிரபாகரன், பாளை சி.ஆ.காசிராசன், சூரங்குடி மாரிமுத்து, பிரபாகரன், ச.சதீஸ் மாவட்டப் பொருளாளர் சந்திரசேகர் தலைமைக்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம், கழகப் பொருளாளர் திருப்பூர் சு.துரைசாமி ஆகியோர் உரையாற்றினார்கள்.

நிறைவாகக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் தூத்துக்குடி மாவட்டச் செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில் பெரியார் 146ஆவது பிறந்தநாளைக் குடும்ப விழாவாகக் கொண்டாடுவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

சந்திரசேகர் நன்றி கூறக் கூட்டம் நிறைவு பெற்றது.



**மயிலாடுதுறை:** மயிலாடுதுறை மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் 17.08.2024 அன்று புத்தகச் சோலையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் முன்னிலையிலும் நடைபெற்றது

தோழர் இன்பா கடவுள் மறுப்பு உறுதிமொழி கூறினார். கழகத் தலைமைக்குழு உறுப்பினர் இளையராஜா கூட்டத்தின் நோக்கத்தைப் பற்றியும், கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்தும் பேசினார்கள்.

நிறைவாகக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

நகரத் தலைவர் நாஞ்சில் சங்கர் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.



**தென்காசி:** தென்காசி மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 24.08.2024 அன்று கீழபாவூர் மேட்டுத் தெருவில் உள்ள மாசிலாமணி இல்லத்தில் நடைபெற்றது

கலந்துரையாடல் கூட்டத்திற்குக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை வகித்தார். கழகப் பொருளாளர் திருப்பூர் சு.துரைசாமி, கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தென்காசி மாவட்டக் கழகச் செயலாளர் சு.அன்பரசு வரவேற்புரையாற்றினார்.

கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் கலந்துரையாடல் கூட்டத்தின் நோக்கம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

தென்காசி மாவட்ட தமிழ்நாடு அறிவியல் மன்றப் பொறுப்பாளர் ச.தமிழ்செல்வன், கடையம் இந்திரஜித், கடையம் சங்கர், மாவட்டத் தலைவர் குறும்பை அரு.மாசிலாமணி, மாவட்டச் செயலாளர் அ.அன்பரசு ஆகியோர் தென்காசி மாவட்டத்தில் இயக்கச் செயல்பாடு குறித்தும், எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் பேசினர்.

மேலும் கழகப் பொருளாளர் துரைசாமி, கழகத் தலைமைக்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

நிறைவாகக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

நிகழ்வில் கீழப்பாவூர் ஒன்றிய செயலாளர் அருணா பேரி ச.சுப்பையா சேர்மத்துரை, தங்கத்துரை, மனோஜ், அமல்ராஜ், செல்வம், நெல்லை பால்வண்ணன், பாளை. சி. ஆ.காசிராசன், கோமதி, ரமணி, உமா மஞ்சு, மாலதி, திருவெற்றியூர் ராஜா, பூங்குன்றன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் கழகத் தலைவருக்கு பேரூராட்சி மன்றத் தலைவர் P.M.S. ராஜன், மேனாள் பேரூராட்சி மன்றத் தலைவர் பொன்.அறிவழகன் ஆகியோர் பயனாடை அணிவித்துப் பாராட்டினர்.

## கோவை: பெரியார் பிறந்தநாளைச் சிறப்பாக கொண்டாட முடிவு

கோவை: கோவை மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் 01.09.2024 அன்று கோவை தமிழ்ப்புலிகள் கட்சி அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவர் பெரியாரின் 146ஆவது பிறந்தநாளைச் சிறப்பாகக் கொண்டாடுவது பற்றி ஆலோசிக்கப்பட்டது. மேலும் காந்திபுரம் பெரியார் சிலை, நியூ சித்தாபுதூர், பீளமேடு, உப்பிலிபாளையம் காந்தி நகர், உக்கடம், கவுண்டம்பாளையம், சிவானந்தகாலனி உள்ளிட்ட பகுதிக் கழகங்களில் பெரியார் பிறந்தநாள் விழா - சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்பு நிகழ்வு நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

கோவையின் புறநகர் பகுதிகளான அன்னூர், காரமடை, சூலூர், மேட்டுப்பாளையம், கிணத்துக்கடவு உள்ளிட்ட பகுதிகளிலும் பெரியார் பிறந்தநாளை வெகு சிறப்பாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டது. இதில் கழகப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## ரூ.10,000 நன்கொடை



திருப்பூர் மாநகரக் கழகச் செயலாளர் மாதவன், தனது புது இல்லத் திறப்பின் மகிழ்வாக புரட்சிப் பெரியார் முழக்கம் இதழுக்கு ரூ.10,000/-யைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : September 05, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran